நாள்.06.08.2025

**RLTOP எண். 1/2025**
**பெயர்.ரைகானா பேகம்**

**க.பெ.சகாபுதீன்**

**<u>ம.சா.1– எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிர்மனுதாரருக்கு எந்த தேதியில் நான் வாடகை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தினேன் என்றால் 01.03.2023ல். அதிலிருந்து எவ்வளவு நாட்கள் கழித்து அவரிடம் கடையை ஒப்படைத்தேன் என்றால் ஒப்பந்தம் ஏற்படுத்திய தேதியிலேயே கடையை ஒப்படைத்துவிட்டேன். வாடகை தொகையை மாதம் மாதம் எதிர்மனுதாரர் Gpay செய்வார் என்றால் ஆமாம். கடைசியாக 10.01.2025 ல் எதிர்மனுதாரர் ரூ.5000/– மற்றும் ரூ.5000/– ஆக இரண்டு முறை Gpay செய்துள்ளார் என்றால் ஆமாம். மார்ச், ஏப்ரல் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வாடகை பாக்கி உள்ளது. எனது மனு மற்றும் வாக்குமூலத்தில் 10.01.2025 ல் ரூ.5000/– இரண்டு முறை வாங்கியது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கடையை காலி செய்ய வேண்டும் என்ற ஒரு பரிகாரம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வாடகையை சரியாக கொடுக்கவில்லை. எதிர்மனுதாரர் Dolphine Tours and Travels என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார் அதில் falls ceiling போட்டு தடுப்பு அமைத்து உட்கட்டமைப்பு வசதிகள் செய்து CCTV கேமரா பொருத்தியுள்ளார் என்றால் ஆமாம். அந்த வகையில் எதிர்மனுதாரர் ரூ.3,50,000/– செலவு செய்துள்ளார் என்றால் கடையைதான் கொடுத்தோம் செலவு செய்தது பற்றி தெரியாது. நான் போய் பார்க்கவில்லை என் அப்பாதான் பார்த்துக்கொண்டார். எதிர்மனுதாரர் ரூ.3,50,000/– செலவு செய்து அதை முன் பணமாக வைத்து மனுதாரர் புதிதாக அக்ரிமெண்ட் போட்டு புதுப்பித்து தருகிறேன் என்று சொன்னார் என்றால் இல்லை. மொத்தமாக எங்களுக்கு சொந்தமாக எத்தனை கடை

உள்ளது என்றால் 5 கடைகள். 5 கடைகளுக்குமே 11 மாதங்கள்தான் வாடகை உடன்படிக்கை செய்துள்ளோம் என்றால் ஆமாம். எதிர்மனுதாரரை உடனே காலி செய்ய முற்பட்டால் அவருக்கு தொழில் நஷ்டம் ஏற்படும் என்றால் அவர் வாடகை சரியாக கொடுக்கவில்லை. வாடகை சரியாக கொடுக்கவில்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் வழக்கே எதிர்மனுதாரரை காலி செய்ய வேண்டும் என்று தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு கடை வேண்டும் அவர் வாடகையை கொடுக்காததால்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரரை முறையாக அறிவிப்பு மற்றும் அவகாசம் கொடுக்காமல் காலி செய்ய சொல்வதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் என் அப்பா ஏற்கெனவே அறிவிப்பு அனுப்பினார் ஆனால் Door lock என்று அறிவிப்பை எதிர்மனுதாரர் வாங்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.